அதே ஆண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் இருந்து தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்திற்கு 40,000 டன்கள் எடையுள்ள யூகலிப்டஸ் ஹைபிரிட் மரங்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன. இம் மரங்கள் கீழ்க்கண்ட தற்காலிக விலைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

	தற்காலிக விலை டன் ஒன்றுக்கு. ரூ.
யூகலிப்டஸ் ஹைபிரிட்	150
யூகலிப்டஸ் கிராண்டிஸ்	280
பட்டை உரிக்கப்பட்ட மிளாறு மரங்கள் ..	250
மூங்கில்	100

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைல மரத்தைப் பயன்படுத்தி, காகிதம்—செய்தித் தாள் போன்றவற்றை, தனியார் துறை தயாரிப்பது போல், தொழில் துறையும் வனத் துறையும் சேர்ந்து இப்படி ஒரு தொழிற் சாலை நிறுவ முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே, தமிழ்நாடு காகித ஆலை, புகளூரில் இந்த மாதிரியான காகிதம்-செய்தித்தாள் தயாரிக்க, 40,000 டன் ஒதுக்கப்பட்டி ருக்கின்றது. வனத் துறை உதவியோடு தான் புகளூரிலே இருக்கிற காகிதத் தொழிற்சாலை, கரும்பு சக்கை உதவியைக் கொண்டும், தற்போது அரசுத் துறையாக இயக்கப்பட்டு வரு கிறது.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகளூரிலே உள்ள காகித ஆலைக்கு எத்தனை டன் தைல மரம் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 40,000 டன்.

திருச்சியில் அறிவியல் அருங்காட்சியகம்.

446 —(*வினா எண். 5143) —திரு. அ. மலர்மன்னன் : **மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) திருச்சி மாநகரில் அறிவியல் அருங்காட்சியகம் (Science Museum) நிறுவும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1986 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) 1986–87 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையம் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

அறிவியல் பூங்காக்கள்.

576 —(*வினா எண். 6257) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் தற்போது எங்கெங்கு அறிவியல் பூங்காக்கள் உள்ளன ?

(ஆ) அவைகளை மேலும் விரிவாக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) எங்கும் இல்லை.

(ஆ) மத்திய அரசின் தேசிய அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் வளர்ச்சி வாரியம் இந்திய தொழில் முன்னேற்ற வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் உதவியுடன் தமிழ் நாட்டில் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழில் நுட்ப நிறுவனங்களின் வளாகத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் பூங்காக்களை அமைக்க ஆலோசித்து வருகிறது.

பென்னாகரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகள்.

577 —(*வினா எண். 2227) —திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னாகரம் வட்டம், பென்னாகரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதியுடன் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே பென்னாகரம் தாலுக்காவாகி சுமார் 8 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. அங்கே ஆரம்பச் சுகாதார நிலையம் மட்டும் தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 1984-வது ஆண்டு அங்கே வந்தார்கள் பென்னாகரம் நகரத்திலே 20,000 மக்கள் தொகை உள்ளனர்.